
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1317

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்


# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

176

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த **வி.வெங்கா** அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# ஐவர் அணியின் இளைஞர் வி.வெங்கா!



ஓவியம் : ரவி பேலட்

**1963**-ஆம் ஆண்டு, இந்தித் திணிப்புக்கு எதிராக, அரசியல் சட்டம் மொழிப்பிரிவு 17-ஆம் விதி இருக்கும் சட்ட நகலை நவம்பர் 17 அன்று பொது இடத்தில் கொளுத்துவது எனப் போராட்டம் அறிவித்தது கழகம். வரலாற்றுச் சிறப்பு மிக்க வீரதீரமான அந்தப் போராட்டத்தின் முதல் அணியான ஐவர் அணி, பேரறிஞர் அண்ணா தலைமையில் அமைந்தது. அண்ணாவுடன் இடம்பெற்ற மற்றவர்கள் - டி.எம்.பார்த்தசாரதி, டி.கே.பொன்னுவேலு, வி.வெங்கா, கே.பி. சுந்தரம் ஆகியோர். இந்த ஐவர் அணியும் மாலை 4 மணிக்கு அறிவகத்தில் இருந்து புறப்பட்டு மெரினா சென்று, அங்கே எரிப்பது எனத் திட்டம். அதன்படி, அந்த நாளில் புறப்பட்டுச் சென்று எரிக்கும் முன்னரே அமைந்தகரையில் அண்ணா கைதுசெய்யப்பட்டார். ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை. அவருடன் முதல் அணியில் இடம்பெற்ற ஐவருக்கும் ஆறுமாத கால கடுங்காவல் தண்டனை பெற்றனர்.

கழகத்தின் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும்போது, கழக முன்னோடிகள் பலரும் தமிழ் இன, மொழி உரிமைக்காகப் போராடி, சிறைக் கொட்டடிகளை அனுபவித்த, கொள்கைக்காகத் தங்களை அர்ப்பணித்த தியாகங்கள் கொண்ட தீரர்கள் என்பதை அறிவோம். அந்த வரிசையில் பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, தியாக வரலாறு கொண்ட தீரர்களில் ஒருவர்தான் வி.வெங்கா. பேரறிஞர் அண்ணாவுடன் அவர் கொண்டிருந்த நெருக்கமும் அண்ணாவுடன் இணைந்து சிறை சென்ற போராட்டங்களும் அவரது போற்றுதலுக்குரிய வரலாற்றைச் சொல்பவை.

கழகத்தின் கொள்கைகளை மக்களிடம் கொண்டுசேர்த்த தொடக்கக் காலங்களில் அண்ணா முன்னெடுத்த ஒவ்வொரு போராட்டமும் வெறும் நிகழ்ச்சியாக இருக்கவில்லை. அது அந்தத் தலைமுறையின் அரசியல் பயிற்சியாக இருந்தது. அண்ணாவிடம் நெருக்கமாக இருந்து, அந்தப் பயிற்சியைப் பெற்றவர்களில் ஒருவர் வெங்கா. செங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கத்தைச் சேர்ந்தவர். நடுத்தர விவசாயக் குடும்பப் பின்னணியைக் கொண்டவர்.

கழகத்தின் தொடக்க காலத்தில் இருந்தே, தன்னை இணைத்துக்கொண்டிருந்தவர் வெங்கா. கழகத்தின் அனைத்து போராட்டங்களிலும், பிரச்சார இயக்கங்களிலும் பங்கேற்றவர். 1962-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், அச்சரப்பாக்கம் தொகுதியில் கழகத்தின் வேட்பாளராகக் களமிறங்கிய வெங்கா, 22,748 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தார். வெற்றி, தோல்வி என்ற கணக்கைத் தாண்டி, அன்றையக் காலகட்டத்தில் கழகத்தின் அரசியல் கிராமப்புறங்களிலும் தடத்தைப் பதித்தது என்பதற்கான சான்றாக அந்தத் தேர்தல் அமைந்தது.

1963-ஆம் ஆண்டு, கழகம் முன்னெடுத்த விலைவாசி உயர்வுக்கு எதிரான போராட்டத்தில், வெங்கா தீவிரமாக முன்னின்ற தகவல்களை 'தி.மு.க. வரலாறு நூலில் குறிப்பிட்டுள்ளார், கழகத்தின் தியாக மறவர் சிட்டிபாபு. மதுராந்தகத்தில் நடந்த அந்தப் போராட்டத்தில் பங்கேற்று, 2 மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றுள்ளார்.

1963-ஆம் ஆண்டு இந்தித் திணிப்பு எதிர்ப்பு அறப்போராட்டத்தில், பேரறிஞர் அணணாவுடன் பாதுகாப்பு அரணாகச் சுற்றி நின்று கைதானவர். அண்ணாவுடன் சேர்ந்து சிறை சென்ற அந்தப் பயணம், வெங்காவின் அரசியல் வாழ்க்கையில் ஒரு முக்கியமான அடையாளமாக மாறியது. அண்ணாவின் சிறைச்சாலைக் குறிப்பான கைதி எண்- 6342 நூலில் பல இடங்களில், வெங்காவுடனான நெருக்கத்தைக் குறிப்பிட்டிருப்பார் அண்ணா. சென்னை மத்திய சிறையில் இருந்தபோது, அண்ணா அவர்கள் தனது சிறைத் தோழர்களின் மீதிருந்த அன்பின் காரணமாகத் தன் கைப்பட பென்சில் ஓவியத்தை வரைந்ததாகவும், அதில் வெங்கா உள்ளிட்ட தோழர்கள் படம் வரையப்பட்டதாகவும் குறிப்புகள் வாசிக்கக் கிடைக்கின்றன.

பேரறிஞர் அண்ணா மறைவுக்குப் பின்னர், கழகத்தின் தலைமையை ஏற்ற முத்தமிழறிஞர் கலைஞருடனும் அதே நட்பையும், தோழமையையும் கொண்டிருந்தவர். 1978 முதல் 1984 -ஆம் ஆண்டு வரை மாநிலங்களவை உறுப்பினராக இருந்து, நாடாளுமன்றத்தில் கழகத்தின் பிரதிநிதியாகக் குரல்கொடுத்தார். அந்தக் காலத்தில், மாநிலங்களவை என்பது வெறும் பதவிக்கான இடமாக அவருக்கு இருக்கவில்லை. தமிழ்நாட்டில் கழகத் தொண்டர்கள் அனுபவித்த அடக்குமுறைகளையும் ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதல்களையும் நாடாளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுசெல்லும் வாய்ப்பாகவே அந்தப் பொறுப்பினைப் பயன்படுத்தினார் வெங்கா. 1978-ஆம் ஆண்டு, மாநிலங்களவையில் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான விவாதத்தில் பேசிய வெங்கா, மிசா காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் அனுபவித்த அடக்குமுறைகளை உலகத்தின் கவனத்துக்குக் கொண்டுசென்றார். கழகத்தின் மீது நிகழ்த்தப்பட்ட கைது, அடக்குமுறை போன்றவற்றை அவர் நாடாளுமன்றப் பதிவில் பதிவுசெய்தார்.

> **தனது உழைப்பாலும் தியாக வரலாற்றாலும் கழகத்தின் வரலாற்றில் இடம்பெற்றவர். அச்சரப்பாக்கம், மதுராந்தகம் பகுதிகளில் கழகத்தின் அடித்தளம் அமைத்த தியாக மறவர்.**

1983-ஆம் ஆண்டு, இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பான மாநிலங்களவை விவாதத்திலும் வி.வெங்கா பங்கேற்றார். தமிழர்களின் உரிமை குறித்த கேள்வி, தமிழ்நாட்டின் அரசியல் உணர்வோடு எவ்வளவு ஆழமாக இணைந்திருந்தது என்பதை நாடாளுமன்ற விவாதங்களும் வெளிப்படுத்துகின்றன. பின்னாட்களில், வயது மூப்பு காரணமாகத் தீவிர அரசியலில் இருந்து ஓய்வெடுத்தவர், இளைஞர்களுக்கு வழிகாட்டியாக இருந்தார். மதுராந்தகம் ஆறுமுகம் உள்ளிட்ட அடுத்த தலைமுறையினரின் அரசியல் ஆசானாக இருந்தார். பேரறிஞர் அண்ணா உருவாக்கிய அரசியல் தலைமுறையைச் சேர்ந்தவர் வெங்கா. தனது உழைப்பாலும் தியாக வரலாற்றாலும் கழகத்தின் வரலாற்றில் இடம்பெற்றவர். அச்சரப்பாக்கம், மதுராந்தகம் பகுதிகளில் கழகத்தின் அடித்தளம் அமைத்த அந்தத் தியாக மறவர், என்றும் நினைவில் நிற்பார்.

**...துடிக்கும்**

## பதில் சொல்லுமளவுக்கு அவர்கள் ஒர்த் இல்லை!

பிளாக் டிக்கெட் விற்றதை மட்டும் வரலாறாகக் கொண்டவர்கள், மிசா வரலாறு குறித்துத் தரம் தாழ்ந்த செய்கைகள், வன்ம பேச்சுக்களை சட்டமன்றத்தில் உதிர்த்த நிலையில், கழகத் தலைவர் அவர்கள் காணொலி வெளியிட்டு, மிகக் கண்ணியமான விளக்கம் ஒன்றை அளித்தார். நாகரிகத்திற்கு அர்த்தம் தெரியாத அந்தக் கோமாளிக்கூட்டம், அதையும் தரம் தாழ்ந்து விமர்சித்திருக்கிறது. அந்தத் தரம் தாழ்ந்த செயலை, பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், அரசியல் – சமூக செயற்பாட்டாளர்கள் என அனைத்துத் தரப்பினரும் கடுமையாகக் கண்டித்துள்ளனர்.

இதுதொடர்பாகப் பதிவிட்டுள்ள பத்திரிகையாளர் ஆர்.வி. சரண்யா, "மு.க.ஸ்டாலினை இத்தனை அவமானப்படுத்தியும், அவர் வெளியிட்ட வீடியோவில் கொஞ்சம்கூட தரம் தாழாமல், அரசியல் நாகரிகத்தோடும் கண்ணியத்தோடும் பதிலடி கொடுத்திருக்கிறார். அதுமட்டுமல்லாமல், சட்டமன்றம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதையும் அறிவுறுத்தியதோடு, சில கோரிக்கைகளையும் முன்வைத்திருக்கிறார்.

ஆனால், அதற்கு 'த.வெ.க. ஐ.டி. விங்' மிகவும் தரம் தாழ்ந்து பதிவிட்டிருக்கிறது. ஏனெனில், ஆக்கபூர்வமான அரசியல் விமர்சனத்தை முன்வைக்கத் தெரியாதவர்களின் அரசியல் மொழி, விமர்சனத்தைத் தாண்டி தனிநபர் தாக்குதலிலேயே முடங்கிவிடுகிறது.

தவறு செய்பவர்களைத் திருத்தலாம். ஆனால், திருத்துவதையே தவறு என்று கருதுபவர்களை என்ன செய்ய முடியும்? ஒரு கருத்துக்குப் பதில் சொல்ல வேண்டுமென்றால், அதே அரசியல் தரத்தோடு பதில் சொல்ல வேண்டும். தனிநபர் தாக்குதல்களும், அவதூறுகளும் ஆக்கபூர்வமான அரசியலாகிவிடாது. சொல்லப் போனால், இப்படிப்பட்ட பதில்களுக்கு வீடியோ வெளியிட்டு பதில் சொல்லும் அளவுக்கு, அவர்கள் Worth இல்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



ஆர்.வி.எல்.
இரவிச்சந்திரன்



### மாணவர் அணியாக கழகத் தலைவருடன்...

2000-ஆம் ஆண்டு, நான் திருவாரூர் மாவட்ட மாணவர் அணி இணை அமைப்பாளராகப் பணியாற்றியபோது, மறைந்த கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், அண்ணன் அன்பில் பொய்யாமொழி அவர்களுக்கு, திருவாரூர் வடக்கு வீதியில், முன்னாள் உறுப்பினர் அ.அசோகன் அவர்களின் வழிகாட்டுதலின்படி, முதலாம் ஆண்டு நினைவு கொடிக்கம்பம் அமைக்கும் வாய்ப்பைப் பெற்றேன். ஆகஸ்ட் 28 அன்று, அந்த கொடிக்கம்பத்தினை அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் தளபதியார் அவர்கள், தங்கள் திருக்கரங்களால் திறந்துவைத்து, கொடியேற்றிச் சிறப்பித்தார். அவரை வரவேற்று நன்றி தெரிவித்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம். அருகில் அ.அசோகன், வி.ஆர்.என்.பன்னீர்செல்வம் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

**– ஆர்.வி.எல்.இரவிச்சந்திரன், மாநில துணைச் செயலாளர், கழகப் பொறியாளர் அணி, திருவாரூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## மலரும் நினைவுகள்

### மதுரையில் சட்டப்பிரிவு எரிப்பு!

1963-ஆம் ஆண்டு, இந்தித் திணிப்புக்கு எதிராகக் கழகம் அறிவித்த சட்ட நகல் எரிப்பு அறப்போர், டிசம்பர் 16 அன்று மதுரையில் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில், போலீஸ் அதிகாரிகள் கண்ணெதிரில், மதுரை முத்து தலைமையில், மு.காதர்சா, ஆ.முனியாண்டி, அக்கினிராசன், பி.திருஞானம் ஆகியோர் அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவுக்குத் தீ வைத்துக் கொளுத்தினர். அதன் பின்னர், தீயிட்ட ஐவரும் கைதுசெய்யப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900